Class | Adm No

Candidate Name: ______________________________

Higher 2
உயர்தரம் 2

millennia institute

மிலெனியா கல்வி நிலையம்

## 2017 PRELIMINARY EXAMINATION 2
Pre-university 3

தமிழ் மொழி, இலக்கியம் 9567/1
தாள் 1 (பகுதி 2) 29 Aug 2017

Tamil Language and Literature 2 Hour 15 min
Paper 1 (Part 2) Total time for Part 1 and Part 2)

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

# ‘அ’பிரிவு

**முன்னுணர்வுக் கருத்தறிதல்** (5 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக்கொண்டு நிரப்புக.**

மனித வாழ்வில் முக்கியமான காலம் இளமைக்காலம் ஆகும். அக்காலத்தில் நம் வாழ்வு நெறிப்படுத்தப்பட்டால் ஆயுட்காலம் முழுவதும் மன அமைதியோடும் நிறைவோடும் வாழலாம். இளமைப் பழக்கங்கள் தான் வாழ்வுக்கு ____(Q1)____ சேர்க்கும். அதனால்தான், ‘ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது’ என்கிறார்கள். இளமைப் பருவம்தான் நினைவாற்றல் மிக்க பருவம். துணிச்சல் நிறைந்த பருவம். இப்பருவத்தில் ____(Q2)____ கல்வி ‘சிலையில் எழுத்து’ எனப்படுகிறது. முதுமைப்பருவம் கற்றற்குரிய பருவமன்று.

கல்வியை ____(Q3)____ நற்பண்புகளும் ஒருவனிடம் இளமை முதற்கொண்டே அமைந்தால் அவன் சான்றோனாக வாழ்வான். வாய்மை, கொல்லாமை, கள்ளாமை, ஊக்கமுடைமை, இன்னாசெய்யாமை போன்ற நற்பண்புகளை ஒருவன் தன் இளமைப் பருவத்தில் வளர்த்துக்கொண்டால் முதுமையில் சான்றோர்கள் பலராலும் பாராட்டப்படும் ____(Q4)____ அடைவான். ஆகவே, மாணவர்கள் தம் இளமைப் பருவத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அரசாங்கம் ____(Q5)____ நன்மைகளையும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இயன்றவரை நற்பண்புகளையும் நல்லொழுக்கங்களையும் பழக்கிக் கொள்ள வேண்டும். இவற்றைக் கடைப்பிடித்தால் வாழ்வில் உயர்ந்து விளங்க முடியும்.

## <u>“ஆ” பிரிவு</u>

**சுயவிடைக் கருத்தறிதல்** **(30 மதிப்பெண்கள்)**

### பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை எழுதுக.

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி. பலவகை இலக்கியங்களுள் குழந்தை இலக்கியம் பழமையான ஓர் இலக்கியமாகக் காணப்படுகிறது. இந்த இலக்கியத்துள் குழந்தைப் பாடல்கள், கதைகள், நாவல்கள், நாடகங்கள் என்பன உள்ளடங்குகின்றன. இவற்றுள் குழந்தைப் பாடல்களும் குழந்தைக் கதைகளும் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. உலகம் முழுவதும் கதைகளுக்குச் **<u>செல்வாக்கு</u>** உண்டு. சிறிய வயதில் தாயின் மடியில் படுத்துக்கொண்டு கதை கேட்காமல் தூங்கிய குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும். கதை கேட்டுப் பழகாத குழந்தைகளால் சம்பவங்களைத் தொகுத்துச் சொல்ல முடியாது; அதைவிடவும் முக்கியமானது கற்பனை மூலம் புதுப்புது உலகங்களை உருவாக்கிக் கொள்ளவும் முடியாது. கதை கேட்பது குழந்தைகளுக்கு மிக அவசியமான செயல்பாடாகும். குழந்தைக் கதைகளின் நோக்கம் உயரிய விழுமியங்களையும் அறநெறிக் கருத்துகளையும் அறிவுறுத்துவதாகும்.

கதை சொல்வது நீதி **<u>போதனைக்காக</u>** மட்டும் அல்ல என்பதைக் குழந்தைகளுக்கான கதைகளைத் தெரிவுசெய்யும்போது பெற்றோர் கவனத்திற்கொள்ள வேண்டும். நேரடியான முறையில் நீதி போதிப்பது குழந்தைக் கதைகளின் முக்கியமான நோக்கமல்ல. கதைகளைக் கேட்கும்போதும் படிக்கும்போதும் விழுமியங்களையும் அறநெறிகளையும் உணர்ந்துகொள்ளுமாறு செய்ய வேண்டும்.

நம்மில் பெரும்பான்மையோர் ஆழ்ந்து கேட்கப் பொறுமை இல்லாதவர்களாய்த்தான் இருக்கிறோம். ஒருவர் பேசும்போது **<u>இடைமறிக்கிறோம்</u>**. எனக்குத் தெரியாததையா இவர் சொல்லப் போகிறார் என்னும் மனப்பாங்கும் இதற்குக் காரணமாகும். ஆனால், உன்னிப்பாகக் கேட்டல் என்பது ஒரு திறன் மட்டுமல்ல; விரும்பத்தக்க மனப்பான்மையும் ஆகும். உன்னிப்பாகக் கேட்டல் என்னும் திறன் தன்னுடன் பேசுபவரை மதிக்கின்ற மனப்போக்கையும் வளர்க்கிறது. கதை சொல்வதன் மூலமாக இத்திறனை வளர்க்க முடியும்.

குழந்தைகளுக்கு உன்னிப்பாகக் கேட்கும் திறன் வளர வளர அதைச் சோதித்துப் பார்க்க அவர்கள் விரும்புகிறார்கள். அதனால், தங்களுக்குப் பிடித்த கதைகளைக் குழந்தைகள் மீண்டும் மீண்டும் கேட்க விரும்புகிறார்கள். இரண்டாவது, மூன்றாவது முறை கேட்கும்போது அடுத்து என்ன நடக்கும் என்பதை அவர்களால் சரியாக ஊகிக்க முடிவதால் மகிழ்ச்சியடைகிறார்கள். அவர்களுக்குத் தாங்கள் ஊகிக்கும் திறனைப்பற்றிய நம்பிக்கை பெருகுகிறது.

மற்றவர்களோடு நமது எண்ணங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்வது சொற்களின் மூலமாகத்தான் நடைபெறுகிறது. உதாரணமாகக் குழந்தைகள் தமது அனுபவத்தின்மூலம் பசி, தாகம், கோபம் முதலான உணர்வுகளைப் பெற்றிருக்கிறார்கள். கதைகளைக் கேட்கக் கேட்கக் குழந்தைகள் இந்த உணர்வுகளை அர்த்தமுள்ள விதத்தில் புரிந்துகொள்கிறார்கள். இதன்மூலம் தம் மொழியறிவையும் உலகம் பற்றிய அறிவையும் வளர்த்துக்கொள்கிறார்கள்.

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். எனவே அவர்கள் வருங்காலச் சமுதாயத்தை உருவாக்கித் தாங்கி நிற்கும் தூண் போன்றவர்கள். அவர்கள் நற்பண்புடையவர்களாகத் திகழ வழிவகுப்பது குழந்தை இலக்கியமே.

**<u>வினாக்கள்</u>**

Q6 தாயிடம் கதை கேட்கும் குழந்தைகள் பெறும் பயன்கள் யாவை?
(5 மதிப்பெண்கள்)

Q7 குழந்தைகளுக்குக் கதை கூறும்போது எத்தகைய நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்? (6 மதிப்பெண்கள்)

Q8 உன்னிப்பாகக் கேட்கும் குழந்தைகள் என்னென்ன நன்மைகள் பெறுவார்கள்?
(6 மதிப்பெண்கள்)

Q9 சிறுவர்களை நற்பண்புடையவர்களாகத் திகழச் செய்வதில் குழந்தை இலக்கியத்தின் பங்கு யாவை? (7 மதிப்பெண்கள்)

Q10 <u>சொற்பொருள்</u> (6 மதிப்பெண்கள்)

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.**

**(அ) செல்வாக்கு – வரவேற்பு**

**(ஆ) போதனைக்காக – அறிவுரைக்காக, கற்பித்தலுக்கா**

**(இ) இடைமறிக்கிறோம் – குறுக்கிடுகிறோம்**

(முற்றும்)